# பிதாவாகிய ஆபிரகாம்

**பாடம் மூன்று**

## ஆபிரகாமின் வாழ்க்கை: நவீன பயன்பாடு

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1

ஆபிரகாமும் இயேசுவும் ........ 2

ஆபிரகாமின் வித்து ........ 3

ஒருமைத்துவம் ........ 3

கிறிஸ்துவாகிய வித்து ........ 6

முக்கிய கருப்பொருள்கள் ........ 9

தெய்வீக கிருபை ........ 9

ஆபிரகாமுடைய தேவப்பற்று ........ 10

ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் ........ 11

ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள் ........ 11

இஸ்ரவேல் மற்றும் சபை ........ 13

ஆபிரகாமின் வித்து ........ 14

எண்ணிக்கையின் அளவு ........ 14

இன அடையாளம் ........ 15

ஆவிக்குரிய குணாதிசயம் ........ 17

வரலாற்றுச் சூழல் ........ 20

முக்கிய கருப்பொருள்கள் ........ 22

தெய்வீக கிருபை ........ 23

ஆபிரகாமுடைய தேவப்பற்று ........ 23

ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் ........ 24

ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள் ........ 25

முடிவுரை ........ 26



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதைகள் இன்று நம் வாழ்க்கையை வழிநடத்தக் கூடியவை என்று கற்பனை செய்வது கடினம் என்பது தான் இன்றைய மக்களில் பலர் வேதாகமத்தைப் பற்றி கடினமாகக் காணும் ஒரு விஷயமாகும். வேதாகமத்தில் ஆபிரகாமின் விவரங்களைப் பொறுத்த வரை இது நிச்சயமாக உண்மையாக இருக்கிறது. ஆபிரகாம் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர், அவரைப் பற்றிய கதைகள் கிட்டத்தட்ட 3600 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டன. ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் இந்தக் கதைகள் வேதத்தின் ஒரு பகுதியாகும் என்கிற உண்மையை நம்புகிறோம், எனவே இந்த காலத்தில் உள்ளவர்களுக்குக் கூட இது பிரயோஜனமானது என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

இந்த உறுதிகளுடன் கேள்விகள் இன்னும் இருக்கின்றன: ஆபிரகாமைப் பற்றிய இந்தக் கதைகள் இன்றும் நம் வாழ்விற்கு எவ்வாறு பொருந்தும்? ஆபிரகாமில் இருந்து நம்மைப் பிரிக்கும் 4000 ஆண்டு இடைவெளியை எவ்வாறு இணைப்பது?

இந்தத் தொடருக்கு, பிதாவாகிய ஆபிரகாம் என்ற தலைப்பை நாம் வைத்துள்ளோம், ஏனென்றால் ஆதியாகமம் புத்தகத்தில் ஆபிரகாமின் வாழ்க்கையை ஆராய்ந்து வருகிறோம். மூன்று அறிமுக பாடங்களில் இது இரண்டாவதாகும், மேலும் இந்த பாடத்திற்கான தலைப்பு “ஆபிரகாமின் வாழ்க்கை: நவீன பயன்பாடு.” இந்தப் பாடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய மேலோட்டத்தை ஆதியாகமத்தில் உள்ள அதிகாரங்களின் நவீன பயன்பாடுகளைக் குறித்த முறையான வழியில் கவனம் செலுத்துவதன் மூலம் முடிப்போம். ஆபிரகாமைப் பற்றிய கதைகளை நம் வாழ்வில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? இன்று அவை நம்மீது என்ன வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?

ஆபிரகாமின் வாழ்க்கை நம் உலகிற்கு எவ்வாறு பொருந்தும் என்பதைப் புரிந்து கொள்ள, நாம் இரண்டு அடிப்படை திசைகளில் பார்ப்போம்: முதலாவதாக, ஆபிரகாமுக்கும் இயேசுவுக்கும் இடையிலான தொடர்புகள், இரண்டாவதாக, இஸ்ரவேலின் மூல பார்வையாளர்களுக்கும் சபையிலுள்ள நவீன பார்வையாளர்களுக்கும் இடையிலான தொடர்புகள்.

ஆபிரகாமின் வாழ்க்கையின் நவீன பயன்பாட்டைப் பார்ப்பதற்கு முன், முந்தைய பாடங்களில் நாம் கண்டதை மறுபரிசீலனை செய்ய சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். ஆபிரகாமின் கதை ஐந்து சமச்சீர் படிகளாகப் பிரிவதை நாம் கற்றுக்கொண்டோம். முதலில், ஆபிரகாமின் பின்னணி மற்றும் அவரின் ஆரம்ப அனுபவங்களுடன் 11:10–12:9 இல் தொடங்குவோம். இரண்டாவதாக, பல

அத்தியாயங்கள் 12:10–14:24 இல் ஆபிரகாம் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்ட முந்தைய தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மூன்றாவது மற்றும் மையப் பிரிவு 15:1–17:27 இல் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை மையமாகக் கொண்டுள்ளது. ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்காவது பகுதி 18:1–21:34 இல் ஆபிரகாம் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்ட தொடர்புகளுக்கு மாறுகிறது. ஐந்தாவது பிரிவு ஆபிரகாமின் சந்ததியையும் அவனுடைய மரணத்தையும் 22:1–25:18 இல் பேசுகிறது. இந்த ஐந்து படிகள் முற்பிதாவின் வாழ்க்கையை சமச்சீர் வடிவத்தில் விளக்குகின்றன. ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையை கையாளும் மூன்றாவது பிரிவு, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மையப் பகுதியாக செயல்படுகிறது. இரண்டாவது மற்றும் நான்காவது பிரிவுகள் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன, ஏனெனில் அவை இரண்டும் மற்ற மக்களுடன் ஆபிரகாம் கொண்டிருந்த தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. முதல் மற்றும் கடைசி பிரிவுகள் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் விவரங்களை வழங்குவதன் மூலம் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகின்றன, கடந்த காலத்திற்க்கும் எதிர்காலத்திற்கும் இடையில் அவரது குடும்ப தலைமுறையை இணைக்கின்றன. ஆபிரகாமின் வாழ்க்கையின் அடிப்படை கட்டமைப்பிற்கு அப்பால், ஆபிரகாமின் வாழ்க்கையை எழுதுவதில் மோசேக்கு ஒரு நோக்கம் இருந்தது என்பதை முந்தைய பாடங்களிலும் பார்த்தோம். ஏன் மற்றும் எப்படி எகிப்தை விட்டு இஸ்ரவேலர்கள் வெளியேறி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதை நோக்கித் தொடர இஸ்ரவேலுக்குக் கற்பிப்பதற்காக மோசே ஆபிரகாமைப் பற்றி எழுதினார். வேறு வார்த்தைகளில் கூறினால், ஆபிரகாமில் அவர்களுடைய வாழ்க்கையின் வரலாற்று பின்னணியைப் பார்ப்பதன் மூலமும், ஆபிரகாமின் கதைகளில் பின்பற்றவும் நிராகரிக்கவும் மாதிரிகள் அல்லது எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடிப்பதன் மூலமும், அவருடைய வாழ்க்கை அவர்களின் வாழ்க்கைக்கு எவ்வாறு முன் நிழலிடுதலாக இருந்தது என்பதையும் புரிந்துகொள்வதன் மூலம், மோசேயைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனின் நோக்கத்தைத் தொடருவதற்கான வழிகளைக் காண முடிந்தது. முந்தைய பாடங்களைப் பற்றிய இந்த மதிப்பாய்வை மனதில் கொண்டு, ஆபிரகாமின் வாழ்க்கைக் கதையின் நவீன பயன்பாட்டிற்கு திரும்ப நாம் இப்போது தயாராக உள்ளோம்.

## ஆபிரகாமும் இயேசுவும்

ஆபிரகாமிற்கும் இயேசுவிற்கும் இடையே உள்ள தொடர்பை நாம் முதலில் பார்ப்போம். துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்தவர்கள் ஆபிரகாமின் வாழ்க்கையை நவீன வாழ்க்கைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நேரடியாகப் பயன்படுத்துகிறார்கள். ஆபிரகாமின் கதைகளை நம் வாழ்க்கைக்கு நேரடியாக பேசும் எளிய தார்மீக கதைகளாக அணுகுவோம். எப்படியிருந்தாலும், ஆபிரகாமுடனான நம் உறவு மத்தியஸ்தப்படுத்தப்படுகிறது என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவோம்; ஆபிரகாமின் வாழ்க்கை நமக்கு மிகவும் பொருத்தமானது, ஏனென்றால் ஆபிரகாமின் விசேஷித்த வித்தாகிய கிறிஸ்துவுடன் நாம் இணைந்திருக்கிறோம். ஆபிரகாமுக்கும் நமக்கும் இடையே கிறிஸ்து நிற்கிறார். இந்த காரணத்திற்காக, ஆபிரகாமைப் பற்றிய வேதபூர்வமான கதைகளை கிறிஸ்துவின் வெளிச்சத்திலும் அவர் செய்தவற்றின் வெளிச்சத்திலும் நாம் எப்போதும் பார்க்க வேண்டும்.

முற்பிதாக்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான தொடர்புகளை புரிந்துகொள்ள இரண்டு விஷயங்களை தொடுவோம். ஒருபுறம், கிறிஸ்து ஆபிரகாமின் வித்து என்று புதிய ஏற்பாடு எவ்வாறு கற்பிக்கிறது என்பதை ஆராய்வோம். மறுபுறம், ஆபிரகாமின் வாழ்க்கையில் நாம் கவனித்த நான்கு முக்கிய கருப்பொருள்கள் ஆபிரகாமின் சந்ததியாக கிறிஸ்துவுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை பார்ப்போம். ஆபிரகாமின் வித்து கிறிஸ்து என்ற கருத்தை முதலில் பார்ப்போம்.

## ஆபிரகாமின் வித்து

இப்போது வரலாறு முழுவதும் ஆபிரகாம் எல்லா விசுவாசிகளின் அதாவது ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் தந்தையாக இருக்கிறார். நாம் அனைவரும் அவருடைய குடும்பத்தின் ஒரு அங்கம், அவருடைய பிள்ளைகளும் அவருடைய வாரிசுகளுமாய் இருக்கிறோம். ஆனாலும் நாம் பார்ப்பது போல, புதிய ஏற்பாடு இந்த நிலையை நாம் அனுபவிக்கிறோம் என்பதை தெளிவுபடுத்துகிறது. ஏனென்றால் ஆபிரகாமின் விசேஷித்த வித்தான கிறிஸ்துவுடன் நாம் இணைந்திருக்கிறோம். வேதாகமம் இந்த கண்ணோட்டத்தை எவ்வாறு கற்பிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு இரண்டு விஷயங்களை சுருக்கமாகப் பார்ப்போம்: அதாவது, முதலில் "வித்து" என்ற கருத்தின் ஒருமைத்துவத்தையும், இரண்டாவது கிறிஸ்து ஆபிரகாமின் விசேஷித்த வித்து என்பதையும் பார்ப்போம்.

### ஒருமைத்துவம்

ஆபிரகாமின் சந்ததியினரின் ஒருமைத்துவத்தைக் குறித்து வேதம் கவனத்தை ஈர்க்கும் வழிகளில் சிந்திக்கலாம். இந்த விஷயத்தில் கவனம் செலுத்தும் மிக முக்கிய வேத பகுதி காலத்தியர் 3:16 ஆகும். இந்த வார்த்தைகளை இங்கே காணலாம்:

> ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே (கலாத்தியர் 3:16).

இந்த வேத பகுதியில், பவுல் ஆதியாகமத்தில் தேவன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் வாக்குத்தத்தங்கள் அளித்தார் என்கிற உண்மையைக் குறிப்பிடுகிறார். ஆனால் "வித்து" என்ற வெளிப்பாட்டை பவுல் எவ்வாறு தெரிவித்தார் என்பதைக் கவுனியுங்கள், ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் தேவன் வாக்குத்தத்தம் அளிக்கவில்லை – அதாவது அநேக மக்களுக்கு அல்ல – ஆனால் ஆபிரகாமுக்கும் அவருடைய ஒரே வித்தாகிய கிறிஸ்துவுக்கு மட்டுமே.

"வித்து" என்று மொழிபெயர்க்கப்பட்ட *செரா* என்ற எபிரேய வார்த்தை ஒரு ஒருமைச்சொல் என்பதை குறிப்பிட்டு பவுல் இவ்வாறு வாதிட்டார். பவுலின் நாளில் கிடைத்த பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் *ஸ்பெர்மா* என்ற கிரேக்க வார்த்தையிலும் இதுவே உண்மை. ஆபிரகாமுக்கும் அவருடைய வித்துகளுக்கும் (பன்மையில்) வாக்குத்தத்தம் என்று தேவன் ஆபிரகாமிடம் சொல்லவில்லை, ஆனால் அவருடைய வித்து ஒருமை என்று பவுல் குறிப்பட்டுள்ளார்.

இப்போதும் மேலோட்டமாகப் பார்க்கும்போது, பவுலின் பார்வை நேரடியானது என்று தோன்றும். ஆபிரகாமின் பரம்பரை ஒரு வித்து அல்லது ஒரு சந்ததிக்கு வந்தது. ஏனென்றால் இந்த வார்த்தை ஒருமையில் உள்ளது. ஆனால் "வித்து" என்ற வார்த்தையின் ஒருமைத்துவம் குறித்து பவுலின் வாதம் வியாக்கியானம் செய்பவர்களுக்கு எல்லா வகையான சிரமங்களையும் எழுப்பியுள்ளது. இந்த வழியில் பிரச்சனையை இப்படி வைக்கலாம். "வித்து" அல்லது *செரா* என்ற சொல் வடிவத்தில் ஒருமை என்பது உண்மைதான், ஆனால் ஆபிரகாமின் வாழ்க்கையின் கதைகள் உட்பட பழைய ஏற்பாட்டிலும் இது இருக்கிறது, வித்து என்ற வார்த்தையை அதன் ஒருமை வடிவத்தில் ஒரு கூட்டு ஒருமையாக எடுத்துக்கொள்ள வேண்டும், அதாவது ஒரு குழுவைக் குறிக்கும் ஒரு ஒற்றைச்சொல் ஆகும். *செரா* அல்லது "வித்து" என்ற எபிரெய வார்த்தை ஆங்கில வார்த்தையான "சந்ததி" போன்றது. இந்த வார்த்தை ஒருமையாக இருந்தால், இது ஒரு சந்ததி அல்லது "வம்சம்" என்பதை குறிக்கும் அல்லது கூட்டாக பல சந்ததிகளையோ அல்லது "வம்சங்களையோ" குறிக்கும்.

உதாரணமாக, ஆதியாகமம் 15:13 இல் "வித்து" அல்லது *செரா* என்ற சொல் நிச்சயமாக பன்மையாகும். தேவன் ஆபிரகாமுடன் பேசியதாக இந்த வார்த்தைகளை அங்கே படித்தோம்.

> அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய் (ஆதியாகமம் 15:13).

இங்கே "சந்ததியார்" என்ற சொல் *செரா எ*ன்ற ஒற்றை எபிரெய வார்த்தையாக மொழிபெயர்க்கப்படுகிறது, ஆனால் இந்த வார்த்தை அர்த்தத்தில் தெளிவாக பன்மையாக உள்ளது. வித்தைக் குறிக்கிற "தங்களுடையதல்லாத" என்ற சொல் பன்மையாக உள்ளது. அவர்கள் ”உபத்திரவப்படுவார்கள்" என்ற வினைச்சொற்களும் எபிரெய மொழியில் பன்மையாக இருக்கின்றன.

நிச்சயமாக, வித்து என்ற வார்த்தையின் ஒருமை வடிவம் ஆதியாகமத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களை குறிக்கிறது என்பதை பவுல் அறிந்திருந்தார். உண்மையில் பவுல் வித்து என்ற வார்த்தையை கலாத்தியர் 3:29 இல் பன்மை அர்த்தத்தில் பயன்படுத்தினார். அவர் இப்படி எழுதிகிறார்,

> நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:29).

இந்த வசனத்தின் கிரேக்க மொழியில் "நீங்கள்" என்ற சொற்றொடர் *எஸ்டே* என்கிற ஒரு பன்மை வினைச்சொல்லாக மொழிப்பெயர்க்கப்படுகிறது. மற்றும் "ஆபிரகாமின் வித்து" என்பது "வாரிசுகள்", (கிரேக்கத்தில் கிலேரோநோமாய்) என்ற சொல்லுக்கு ஒத்ததாக இருக்கிறது, இது பன்மையாகும்.

இதன் வெளிச்சத்தில் நாம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். "வித்து" என்ற வார்த்தையின் ஒருமை வடிவம் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களைக் குறிக்கக்கூடும் என்று பவுல் அறிந்திருந்தால், அதன் ஒருமைத்தன்மையை ஏன் அவர் வலியுறுத்தினார்? எல்லா சாத்தியக்கூறுகளைப் பார்க்கும்போது, ஆபிரகாமின் வாழ்க்கையைக் குறித்து ஆதியாகமத்தில் ஒரு குறிப்பிட்ட வேத பகுதியை பவுல் மனதில் வைத்திருக்கலாம், அது ஆதியாகமம் 22:16-18 ஆகும். இந்த வசனங்களில், "வித்து" என்ற சொல் வடிவம் நிச்சயமாக ஒருமையில் உள்ளது. இந்த வசனங்களின் சாதரணமான மொழிப்பெயர்ப்பை கவனியுங்கள்:

> நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். நீ என் சொல்லுக்குக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர்சொல்லுகிறார் என்றார் (ஆதியாகமம் 22:16-18, நேரடி மொழிப்பெயர்ப்பு).

எதிர்பாராதவிதமாக, பல நவீன மொழிபெயர்ப்புகள் இந்த பகுதியை "வித்து" என்கிற வார்த்தையை ஒரு கூட்டு ஒருமை போல குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்த வசனம் ஈசாக்கின் பலியின் ஒரு பகுதி என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இங்கே "வித்து" என்ற வார்த்தை ஆபிரகாமின் சந்ததினரைக் குறிக்கவில்லை, ஆனால் ஆபிரகாமின் குமரானாகிய ஈசாக்கைக் குறிக்கிறது. "சுதந்தரித்துகொள்வார்கள்" என்ற வினைச்சொல், எபிரெய மொழியில் ஒருமை ஆகும். "அவருடைய எதிரிகள்" என்ற சொற்றொடரில் உள்ள பிரதிபெயர்ச்சொல் ஒருமை என்பதை கவனியுங்கள்.

பிந்தைய பாடங்களை பார்க்கும்போது, ஆதியாகமம் 22 ஆம் அதிகாரம் மற்றும் அதைத் தொடர்ந்து வரும் அதிகாரங்களிலும் சாராவின் குமாரன் ஈசாக்கை மற்ற குமாரர்களான ஆகாரின் மகன் மற்றும் கேத்துராவின் குமாரர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்க நேரத்தை செலவிடுகின்றன. ஆபிரகாமின் ஒரே வாரிசாக தேவன் தேர்ந்தெடுத்த வாக்குத்தத்த விசேஷித்த வித்து ஈசாக்கு. ஆகவே, ஈசாக்கின் பிறப்புக்கு முன்பு ஆதியாகமம் பொதுவாக ஆபிரகாமின் "வித்து" என்பதை பன்மையில் "சந்ததியினர்" என்ற கூட்டுப்பொருளாக பேசுகிறது, ஆனால் இங்கே இந்த வார்த்தை ஈசாக்கை மையமாகக்கொண்டு ஆபிரகாமின் வாக்குத்தத்த வாரிசாக விசேஷித்த ஒற்றை சந்ததியாக கூறுகிறது.

இந்த வெளிச்சத்தில் பவுல் ஆபிரகாமின் ஒற்றை வித்து பற்றி குறிப்பிடும்போது அவரின் அடிப்படை கருத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆதியாகமம் 22:16-18 ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதிகள் அளிக்கவில்லை என்று பவுல் குறிப்பிட்டார். மேலும் ஆதியாகமம் 22:16-18 ல் உள்ள "வித்து" என்ற வார்த்தையின் ஒருமைத்துவம் ஈசாக்கு ஆபிரகாமின் விசேஷித்த குமரானுக்கும் வாரிசுக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதைக் குறிக்கிறது என்பதை சுட்டிக்காட்டினார்.

## கிறிஸ்துவாகிய வித்து

ஆபிரகாமின் வித்து என்று ஒருமையாகச் சொல்லப்பட்டுள்ள வார்த்தையை மனதில் வைத்துக் கொண்டு, கிறிஸ்து ஆபிரகாமின் வித்து என்ற போதனைக்கு நேராக நாம் திரும்ப வேண்டும். கலாத்தியர் 3:16 இல் அப்போஸ்தலன் சொல்வதை மீண்டும் கவனிக்க.

> ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே (கலாத்தியர் 3:16).

இந்தப் பகுதியில் ஆபிரகாமின் வித்து என்பது ஒரு ஒருமை என்று மட்டும் சொல்லாமல், கிறிஸ்துவே அந்த ஒரே வித்து என்ற உண்மையை நோக்கி கவனத்தை ஈர்க்கிறார். இப்பொழுது, நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஆதியாகமத்தின் மூல அர்த்தத்தைப் பொறுத்தவரை, மோசே எழுதிய, ஒருமையில் சொல்லப்பட்டுள்ள ஆபிரகாமின் வித்து என்பது சாராளுக்கு வாக்குத்தத்தத்தினால் பிறந்த விஷேசித்த குமாரனாகிய, ஈசாக்கைத் தவிர வேறு யாருமல்ல. அப்படியானால் பவுல் இயேசுவை ஆபிரகாமினுடைய ஒரே வித்து என்று எழுதினதை நாம் எப்படிப் புரிந்துகொள்வது?

இதை இப்படிச் சிந்தித்துப் பாருங்கள். ஆபிரகாமினுடைய சுதந்திரம் என்பது ஒரு குடும்ப சுதந்திரம் அதாவது இந்த சுதந்திரம் அவனுடைய சந்ததியைச் சாரும். ஆனால் வேதவாக்கியத்தின் வரலாற்றில் எண்ணிக்கைக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகளில், தேவன் சில குறிப்பிட்ட நபர்களை விஷேசமான சுதந்திரவாளிகளாகத் தெரிந்தெடுத்தார், அவர்கள் இந்த வாரிசுரிமையைப் பெற்றுக்கொண்டவர்களாகவும், மற்றவர்களுக்கு வழங்கக்கூடியவர்களாகவும் இருந்தனர். ஈசாக்கின் விஷயத்தில், அவர் ஆபிரகாமின் மற்ற குமாரர்களிடமிருந்து வேறுபட்ட விசேஷித்த வித்து. ஈசாக்கிற்கு யாக்கோபு, ஏசா என்ற இரண்டு குமாரர்கள் இருந்தார்கள், தேவன் யாக்கோபை ஆபிரகாமினுடைய விசேஷித்த வித்தாக தெரிந்து கொண்டார், ஏசாவையும் அவனுடைய சந்ததியையும் விலக்கிப் போட்டார். யாக்கோபிலிருந்து இஸ்ரவேல் கோத்திரங்களின் பன்னிரெண்டு முற்பிதாக்கள் தோன்றினார்கள். ஆனால் இஸ்ரவேல் கோத்திரங்களிலிருந்து பல நபர்கள் ஆபிரகாமின் விசேஷித்த சுதந்திரவாளிகளாக இருந்தனர். உதாரணமாக, தேவனுடைய ஜனங்கள் எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி நகர்ந்தபோது, மோசே, அவர்களுக்குத் தலைவனாகவும், மத்தியஸ்தனாகவும் இருந்தார். பின்னர், இஸ்ரவேல் முழுமையான தன்னிறைவடைந்த ராஜ்யமாக உருவானவுடன், தாவீதும் அவனது குமாரர்களும் ஆபிரகாமின் சுதந்திரவாளிகளாக மத்தியஸ்தம் செய்யும் விசேஷித்த பங்காற்றினார்கள்.

பவுல் ஆபிரகாமின் மிகச்சிறந்த கடைசி வித்தாக கிறிஸ்துவைக் குறிப்பிடுவதற்கு தாவீது மற்றும் அவனுடைய குமாரர்களின் இந்த விஷேசித்த பங்கே வழிகாட்டியது, ஏனெனில், இயேசு தான் தாவீதின் சிங்காசனத்திற்கு உரிமையுள்ள சுதந்திரவாளி. அவர் தேவனுடைய ஜனங்களுக்கு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நிரந்தர ராஜா. அவர் ஆபிரகாமின் மிகச்சிறந்த நித்திய ராஜரீகமான வித்தாகிய மேசியா. மற்றும் அதைப்போல, கிறிஸ்து ஒருவர் வழியாக மட்டுமே எவரேனும் ஆபிரகாமின் சுதந்திரத்தில் பங்குகொள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடியும். கிறிஸ்துவை விட்டு பிரிக்கப்பட்ட எவராலும் ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களை ஒருபோதும் பெற்றுக்கொள்ள இயலாது.

ஆகவே, ஆபிரகாமுடன் இயேசுவின் உறவை இவ்விதமாக நாம் சுருக்கமாக கூறலாம். ஒரு கிறிஸ்தவப் பார்வையிலிருந்து பார்க்கும்போது, இயேசு ஒரு தனித்துவமான, ஆபிரகாமின் இறுதி வித்தாகிறார். மேலும் கிறிஸ்தவர்களாக ஆபிரகாமின் வாழ்க்கையை நவீன உலகத்திற்கு பயன்படுத்த விரும்பும்பொழுது, ஆபிரகாமிற்கும் நம்முடைய உலகிற்கும் இடையேயான தொடர்பானது ஆபிரகாமின் சிறந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்து அவருடைய ராஜ்யத்தை துவக்கியபோதே, கிறிஸ்துவுக்குக் கடத்தப்பட்டது, அவர் அவருடைய ராஜ்யத்தைக் கட்டுவதைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் மற்றும் அவருடைய ராஜ்யத்தை எல்லாவற்றிற்குமான முடிவிற்குக் கொண்டுவருகிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மூன்று பிரதான நிலைகளில் ஆபிரகாமின் சுதந்திரத்தை கிறிஸ்து பெற்றுக்கொண்டு பகிர்ந்துகொள்கிறார் என்பதை புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. முதலாவதாக, அவருடைய ராஜ்யத்தின் துவக்கம் என்பது அவருடைய முதலாம் வருகையில் சம்பவித்தது; இரண்டாவதாக, அவருடைய முதலாம் வருகைக்கு பின்னர் ஆனால் இரண்டாம் வருகைக்கு முன்பதாக வரலாறு முழுவதும் விரிவாக்கப்படுகிறதான அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியில் சம்பவிக்கிறது; மூன்றாவதாக, மகிமையான அவருடைய இரண்டாம் வருகையில் அவருடைய ராஜ்யத்தின் எல்லாவற்றிற்குமான முடிவின்போது சம்பவிக்கிறது. பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலிருந்து எல்லாவற்றையும் ஆளுகை செய்துகொண்டு, ஆபிரகாமின் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டும், பகிர்ந்தளித்தும் அதன் அளவை அதிகப்படுத்துவதை அவர் தொடர்கிறார். மேலும், ஒருநாள் அவர் மகிமையிலே வரும்பொழுது ஆபிரகாமின் சுதந்திரத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்ளவும், முழுமையாகப் பகிர்ந்தளிக்கவும் செய்வார்.

ஒரு வார்த்தையில் சொல்வதென்றால், கலாத்தியர் 3:16 இல் பவுல் ஒரு சிக்கலான இறையியல் கண்ணோட்டத்தை சில வார்த்தைகளில் இணைத்துள்ளார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. வாக்குத்தத்தமானது ஆபிரகாமிற்கும் அவனுடைய ஒற்றை வித்துக்குமானது, மேலும் அந்த வித்தானது கிறிஸ்து என்று அடையாளம் காணப்பட்டது என்று பவுல் சொல்லும்போது, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட “வித்து” என்ற வார்த்தையானது நேரடியாக இயேசுவைக் குறிக்கிறது என்று சொல்லவில்லை. மாறாக, ஈசாக்கிற்கும் கிறிஸ்துவிற்கும் இடையே இருக்கும் வகைமையியலின் நவீன சுருக்கத்தைப் பவுல் பேசுகிறார். இந்த விஷயத்தை முழுமையாகக் கூறவேண்டுமானால், இவ்விதமாகக் கூறலாம், ஆபிரகாமினுடைய சந்ததியில் ஈசாக்கு ஒரு முதன்மையான சுதந்திரவாளி, கிறிஸ்து ஆபிராகாமினுடைய மிகச்சிறந்த குமாரர் மற்றும் புதிய ஏற்பாட்டு யுகத்தின் முதன்மையான சுதந்திரவாளி.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## முக்கிய கருப்பொருள்கள்

ஆபிரகாமின் வித்தாக கிறிஸ்துவின் முக்கியத்துவத்தை முழுமையாக பார்ப்பதற்கு, ஆபிரகாமின் கதைகளில் நாம் கண்டதான நான்கு முக்கியக் கருப்பொருள் இந்தக் காரியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு உதவிபுரியும். ஆதியாகமத்தின் இந்த அதிகாரங்களில் நாம் கண்டதான நான்கு முக்கிய கருப்பொருள்களை நாம் நினைவுகூறுவோம்: தெய்வீக கிருபை, ஆபிரகாமின் தேவப்பற்று, ஆபிரகாமிற்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் ஆபிரகாமின் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதங்கள். இந்த மையக்கருத்துகளை ஆபிராகாம் மற்றும் கிறிஸ்துவிற்கு இடையேயான தொடர்பின் வெளிச்சத்தில் எவ்வாறு நாம் புரிந்துகொள்வது?

### தெய்வீக கிருபை

முதல் இடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் அதிகப்படியான கிருபையைக் காண்பித்தார் என்பதை நாம் பார்த்தோம். ஆபிரகாம் ஒரு பாவி என்பதால் தனிப்பட்ட கிருபை ஆபிரகாமிற்குத் தேவைப்பட்டது என்பது உண்மைதான், ஆனால் இதற்கு அப்பாற்பட்டு, ஆபிரகாமை நோக்கிய தேவனுடைய இரக்கம் என்பதும் கூட தேவனுடைய கருணையின் புறநிலைவாதக் காட்சி ஆகும். ஆபிரகாமுடன் ஒரு உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம், தேவன் உண்மையில் முழு உலகத்திற்குமான இரட்சிப்பை வளர்த்தார்.

இப்பொழுது ஆபிரகாமின் வாழ்க்கையில் இவ்வளவு அதிகமாக தேவன் கருணை காட்டினாரென்றால், கிறிஸ்தவர்களாகிய நாம் நம்புகிறபடி, முற்பிதாவின் மீது தேவன் காட்டின கிருபையானது தேவன் கிறிஸ்துவினிடத்தில் காண்பித்த இரக்கத்தின் நிழலைக் காட்டிலும் சற்று அதிகம். கிறிஸ்து பாவமில்லாதவர் என்பது உண்மை. அதனால் தான் அவர் இரட்சிப்பின் கிருபையை அவருக்காகப் பெற்றுக்கொள்ளவில்லை, ஆனாலும், ஆபிரகாமின் வித்தாக கிறிஸ்துவின் வருகை என்பது இந்த உலகத்தின் மீது தேவனுடைய இரக்கத்தின் மிகச் சிறந்த புறநிலைவாத செயலின் வெளிப்பாடாகும்.

தேவன் கிறிஸ்துவினுடைய முதலாம் வருகையில், ராஜ்யத்தின் துவக்கத்தில் அதிகமான இரக்கத்தைக் காண்பித்தார். அவருடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதல், பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் ஆகிய இவை எல்லாம் தேவனுடைய கிருபையின் அற்புதமான வெளிப்பாடு ஆகும். மேலும் கிறிஸ்து பரலோகத்தில் ஆளுகை செய்கிறவராக, அவருடைய ராஜ்யம் தொடர்ந்துகொண்டிருக்கையில் தேவன் அதிகமான இரக்கத்தை நீட்டிக்கிறார். இரட்சிப்பானது உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருக்கும் வேளையில், தேவன் கிறிஸ்து மூலமாக வரலாறு முழுவதிலும் மறுக்கப்படமுடியாத மாற்றத்தை உலகம் அடையும் பொருட்டு அவருடைய கருணையை வெளிப்படுத்துகிறார். மேலும் கிறிஸ்து மறுபடியும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரும்போது, ராஜ்யத்தினுடைய எல்லாவற்றிற்குமான முடிவானது அளவிடமுடியாத இரக்கத்தைக் கொண்டுவரும். கிறிஸ்து மறுபடியும் வரும்போது ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொண்டு வருவார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக, ஒவ்வொரு நேரமும் ஆபிரகாமின் கதைகளில் தேவன் கருணை காட்டியதை நாம் பார்க்கும்போதெல்லாம், நம்முடைய இருதயமும் சிந்தையும், இந்த மூன்று நிலைகளையுடைய அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் தேவன் வெளிப்படுத்திய இரக்கத்தின் மீது திரும்ப வேண்டும்.

## ஆபிரகாமுடைய தேவப்பற்று

இரண்டாவது இடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையைக் குறித்ததான மோசேயின் பங்களிப்பில் மற்றொரு முக்கியமான கருப்பொருள் என்பது தேவனிடத்தில் ஆபிரகாம் கொண்டிருந்த தேவப்பற்று ஆகும். ஆரம்பத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இடம்பெயர்வதற்கான பொறுப்பை ஆபிரகாம் நிறைவேற்றுவதற்கு தேவன் இதை அவசியப்படுத்தினார். ஆனால் தேவன் வேறு அநேக காரியங்களையும் ஆபிரகாமினுடைய வாழ்க்கை முழுவதிலும் அவசியப்படுத்தினார். கிறிஸ்தவர்களாக ஆபிரகாம் சந்தித்த பொறுப்புகளைப் பற்றி நாம் வாசிக்கும்போது, ஆபிரகாமின் வித்தான கிறிஸ்து மீதும் அவர் அவருடைய பரலோகப் பிதாவிடம் காண்பித்த பற்றின் மீதும் நமது இருதயத்தையும் சிந்தையையும் திருப்புவதற்கு நாட வேண்டும்.

மேலும் நிச்சயமாக, கிறிஸ்து அவருடைய ராஜ்யத்தின் மூன்று நிலைகளிலும் பிதாவினிடத்தில் பற்றுள்ளவராக இருந்தார். ராஜ்யத்தின் துவக்கத்தில்,கிறிஸ்து தாமே விசுவாசத்தின் தேவைகளுக்கு முற்றிலும் உண்மையுள்ளவர் என்பதை நிரூபித்தார். ஆபிரகாம் மிக குறிப்பிடத்தகுந்த வழிகளில் தேவனிடத்தில் பற்றுள்ளவராக இருந்தார் என்ற போதிலும், கிறிஸ்து முழுமையான விசுவாசமுள்ளவராக அவருடைய வாழ்வின் ஒவ்வொரு வேளையிலும் காணப்பட்டார். மேலும் இதற்கு அப்பாற்பட்டு, எல்லாவற்றின் மீதும் ராஜாவாக அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியிலும் அவருடைய பரலோகப் பிதாவிற்கு கிறிஸ்து உண்மையுள்ளவராகவும் விசுவாசமுள்ளவராகவும் நிலைத்திருக்கிறார். சுவிஷேசத்தை விரிவுபடுத்துவதன் மூலமும், அவருடைய ஜனங்களின் இரட்சிப்பின் மூலமும் தேவனுடைய நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றும் விதமாக அவர் ஆளுகை செய்கிறார்.

இறுதியாக, கிறிஸ்து அவருடைய ராஜ்யத்தின் எல்லாவற்றிற்குமான முடிவில் மறுபடியும் வரும்போது, பூமியில் அவருடைய வாழ்க்கையில் ஆரம்பித்ததான நீதியின் கிரியைகளை முடித்துவிடுவார். அவர் தேவனுடைய சத்துருக்களை அழித்துவிடுவார் மற்றும் அவருடைய பிதாவின் மகிமைக்காக எல்லாவற்றையும் புதிதாக்குவார். ஆகவே, தேவனிடத்தில் ஆபிரகாமின் தேவப்பற்றைக் குறித்ததான கருப்பொருளைக் காண்கிற ஒவ்வொரு நேரமும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் வித்தான கிறிஸ்துவுடன் இவற்றை சரியாகத் தொடர்புபடுத்தினால் மட்டுமே கிறிஸ்தவர்களாக இந்தக் காரியங்களை நவீன உலகத்திற்கு சரியாக பயன்படுத்த முடியும்.

## ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்

மூன்றாவது இடத்தில், கிறிஸ்தவர்களாகிய நாம் தெய்வீக கிருபையும் மனித விசுவாசமும் என்ற கருப்பொருள்கள் கிறிஸ்துவில் நம்முடைய காலங்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை பார்ப்பதில் ஆர்வம் காட்டுவதோடு ஆபிரகாமின் வாழ்க்கையின் மூன்றாவது முக்கிய கருப்பொருளான ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் என்பதிலும் நாம் ஆர்வமாக உள்ளோம்.

வாக்குத்தத்தம் பண்ணைப்பட்ட தேசத்தில் செழிப்பு வரும் என்றும் இஸ்ரவேல் ஒரு பெரிய ஜாதியாக மாறும் என்றும் ஆபிரகாகமுக்கும் இஸ்ரவேலுக்கும் உலகளவில் புகழ் பெருகும் என்றும் தேவன் ஆபிரகாமிடம் கூறினார்.

இப்போது, கிறிஸ்தவர்களாகிய நம்முடைய சிந்தை தேவன் ஆபிரகாமின் சந்ததியான கிறிஸ்துவுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை நோக்கி இருக்கவேண்டும். அவருடைய முதல் வருகையில், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டு மரித்தும் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; மற்றும் வானத்திலும் பூமியிலும் இயேசுவின் நாமம் தவிர வேறு உயர்ந்த நாமம் இல்லை. ராஜ்யத்தின் தொடர்ச்சியான காலத்தில் ஆசீர்வாதங்களின் அதிகரிப்பை இயேசு தொடர்ந்து அனுபவித்து வருகிறார். தேவனின் விருப்பத்தின்படி உலகை ஆளுகையில் அவர் தாமே மேலும் மேலும் மகிமையைப் பெறுகிறார். ஆனால், கிறிஸ்து மகிமையுடன் திரும்பும்போது அவர் இந்த ஆசீர்வாதங்களை அளவுக்கு அதிகமாக அனுபவிப்பார். அவர் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்தவராக இருப்பார் மற்றும் எல்லா முழங்கால்களும் ஆபிரகாமின் குமாரனான அவருக்கு முன் முடங்கும். ஆகவே, ஆபிரகாம் தேவனிடமிருந்து ஆசீவாதங்களைப் பெறுவதை பார்க்கும்போதெல்லாம் ஆபிரகாமின் வாக்குறுதிகளை பெற்ற கிறிஸ்துவின் பக்கம் நாம் கண்களை திருப்ப வேண்டும் மற்றும் தேவனின் ஆசீர்வாதங்களை இன்னும் அதிக அளவில் பெறுகிறார்.

## ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள்

இறுதியாக, ஆபிரகாமின் வாழ்க்கையின் நான்காவது முக்கிய கருப்பொருள் ஆபிரகாம் மூலம் ஆசீர்வாதங்கள் வரும் என்பதாகும். பூமியிலுள்ள எல்லா மக்களையும் ஆசீர்வதிப்பதும் சபிப்பதும் ஆபிரகாம் மூலம் நடக்கும் என்று தேவன் கூறினார். புதிய ஏற்பாட்டில் அதிக கவனம் செலுத்துவதே இந்த மகத்தான வாக்குறுதியாகும். ரோமர் 4:13 இல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமிற்கு இந்த வாக்குறுதியை பவுல் குறிப்பிட்ட விதத்தைக் கேளுங்கள். அங்கே அவர் இவ்வாறு சொல்கிறார்,

> அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது (ரோமர் 4:13).

எல்லா தேசங்களையும் ஆசீர்வதிப்பதாக தேவன் ஆபிரகாமிற்கு வாக்குறுதி அளித்தபோது, ஆபிரகாம் எல்லா தேசங்களையும் கைப்பற்றி தேவனுடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் பரப்புவதன் மூலம் இது வரும் என்று இங்கே வாக்குறுதியளித்தார். ஆபிரகாமும் அவருடைய சந்ததியும் உலகத்தின் வாரிசுகளாக இருக்கவேண்டும், எல்லா தேசங்களும் அவர்களுடைய தலைமைத்துவத்திற்கு கீழ் இருக்கவேண்டும். ஆதாமும் ஏவாளும் பூமிமுழுவதையும் கீழ்ப்படுத்தும்படி முதலில் கூறப்பட்டபடி, ஆபிரகாமும் அவருடைய சந்ததியாரும் ஒவ்வொரு தேசத்தின் எல்லா குடும்பங்களுக்கும் தேவனின் ஆசீர்வாதங்களை பரப்புவதன் மூலம் முழுபூமியையும் சுதந்தரிப்பார்கள் என்று வாக்குறுதி அளித்தார்.

இப்போது ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் உலகம் முழுவதுமாக பங்கிட்டுக்கொடுப்பது என்ற இறுதி கருப்பொருள் கிறிஸ்துவுக்கும் பொருந்தும், ஏனென்றால் அவர் ஆபிரகாமின் வித்து மற்றும் ஆபிரகாமின் வாக்குறுதிகளின் வாரிசாவார். ராஜ்யத்தின் துவக்கத்தில் கிறிஸ்து இஸ்ரவேல் தேசத்திலிருந்து உண்மையுள்ள மக்களை அழைத்தார். ஆனால் அவர் மரித்தோரிலிருந்து எழுந்து பரலோகத்தில் சிங்காசனத்திற்கு பரமேறினார், அவர் பூமி அனைத்திற்கும் ராஜாவாக அவர் எழுப்பப்பட்டார் மற்றும் இஸ்ரவேலின் ஆசீர்வாதங்களை எல்லா தேசங்களுக்கு பரப்பும்படி அவருடைய உண்மையுள்ள மீதியானவர்களிடம் கூறினார். ராஜ்யத்தின் தொடர்ச்சியின்போது, கிறிஸ்துவின் ராஜ்யம் எல்லா நாடுகளிலும் சுவிசேஷத்தின் மூலம் பரவுவது அனைத்து தேசங்களையும் ஆசீர்வதிப்பதாக ஆபிரகாமிற்கு அளித்த வாக்குறுதியின் நிறைவேறுதலாகும். மற்றும் கிறிஸ்து ராஜ்யத்தின் முடிவில் திரும்பும்போது, தேவனுடைய ஆசீர்வாதங்களை பூமியிலுள்ள தேசங்களுக்கும் விரிவுபடுத்துவார். வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2 இல் நாம் வாசிப்பது போல:

> பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்
> (வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2).

ஆபிரகாம் எல்லா தேசங்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருப்பார் என்ற வாக்குறுதி இறுதியில் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கத்திலும், தொடர்ச்சியிலும் நிறைவேற்றப்படுகிறது.

ஆகவே, இந்த காரியத்தை நாம் இப்படி சுருக்கமாக கூறலாம். ஆபிரகாமின் வாழ்க்கையை நம்முடைய உலகிற்கு நடைமுறைப்படுத்துவது எப்போதுமே ஆபிரகாமின் வித்தாக கிறிஸ்துவின் பங்கை மறைமுகமாக அங்கிகரிப்பதை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். ஆபிரகாமின் விசேஷித்த வித்து என்பதால், ஆபிரகாமின் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் கருப்பொருள்களை கிறிஸ்துவே நிறைவேற்றுவார் அல்லது நிறைவு செய்கிறார். தேவனுடைய இரக்கம் கிறிஸ்துவில் காட்டப்பட்டுள்ளது; கிறிஸ்துவில் சத்தியமும் பூரணமுமான விசுவாசம் காணப்படுகிறது; ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களையும் கிறிஸ்து பெறுகிறார், கிறிஸ்துவில் ஆபிரகாமின் ஐசுவரியமான ஆசீர்வதங்களும் பூமியின் கடைசி வரை பரவுவதை காண்கிறோம். எப்படி இருந்தாலும் நவீன நடைமுறையை இப்படி நாம் சொல்லலாம், ஆபிரகாமுக்கும் இயேசுவிற்கும் இடையிலான இந்த தொடர்புகளை நாம் நினைவில் கொள்வது அவசியம்.

ஆபிரகாமிற்கும் இயேசுவிற்கும் இடையிலான உறவு ஆபிரகாமிற்கும் நம்முடைய உலகத்திற்கும் இடையிலான ஒரு தொடர்பை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை இப்போதும் நாம் பார்த்தோம். இஸ்ரவேலருக்கும் சபைக்கும் இடையிலான தொடர்பை காண நவீன பயன்பாட்டின் இரண்டாவது அம்சத்திற்கு நாம் திரும்ப வேண்டும்.

## இஸ்ரவேல் மற்றும் சபை

ஆபிரகாமின் வாழ்க்கையைப்பற்றி மோசே முதன்முதலில் எழுதியபோது, இஸ்ரவேல் மக்களை எகிப்தைவிட்டு வெளியேறவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதேசத்தை சுதந்தரித்துகொள்ள தைரியப்படுத்துவதற்காக இந்த விஷயங்களைப் பற்றி அவர் எழுதினார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். ஆபிரகாமின் வாழ்க்கையில் உள்ள தரிசனத்தை வரலாற்று பின்னணியில் அவர்கள் கண்டுப்பிடிக்கவேண்டும்; ஆபிரகாமின் வாழ்க்கையின் கதைகளை பின்பற்றவும் நிராகரிக்கவும் உதாரணங்களை கண்டுப்பிடிப்பதன் மூலம் அவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும்; மற்றும் ஆபிரகாமின் வாழ்க்கையில் அவர்கள் அனுபவங்களின் முன் நிழலிடுதல்களைக் கூட காண நேர்ந்தது. இந்த காரணத்திற்காக, ஆபிரகாமின் கதைகள் நவீன உலகிற்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை பார்க்க,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசேயையும் இன்றைய கிறிஸ்தவ சபையையும் பின்பற்றும் இஸ்ரவேல் தேசத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து புதிய ஏற்பாடு என்ன கற்பிக்கிறது என்பதை நாம் கணக்கில் எடுத்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேலருக்கும் சபைக்கும் இடையிலான இந்த உறவை விளக்குவதற்கு, முந்தைய கலந்துரையாடலுக்கு இணையான இரண்டு தலைப்புகளை தொடுவோம். முதலில், இஸ்ரவேல் தேசத்திற்கும் கிறிஸ்துவின் சபைக்கும் பொருந்தும் விதமாக ஆபிரகாமின் வித்தின் கருப்பொருளை பார்ப்போம். இரண்டாவதாக ஆபிரகாமின் வித்தைப் பற்றிய கருப்பொருள் ஆபிரகாமின் வாழ்க்கையின் கதைகளின் நான்கு முக்கிய கருப்பொருள்களில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை பார்ப்போம். முதலில் இஸ்ரவேலரையும் சபையையும் ஆபிரகாமின் வித்தாக பார்ப்போம்.

## ஆபிரகாமின் வித்து

ஆபிரகாமின் வித்தாக இஸ்ரவேலுக்கும் சபைக்கும் இடையே உள்ள தொடர்பைக் காண்பதற்காக, நான்கு விஷயங்களைக் குறித்து சுருக்கமாகப் பார்க்கலாம். முதலாவது, நாம் ஆபிரகாமின் வித்தினுடைய எண்ணிக்கையின் அளவைக் காணலாம். இரண்டாவதாக, அவனுடைய வித்தினுடைய இன அடையாளத்தின் மீது கவனம் செலுத்தலாம். மூன்றாவதாக, ஆபிரகாமின் வித்தினுடைய ஆவிக்குரிய குணாதிசயம் மீது கவனம் செலுத்துவோம். நான்காவதாக, ஆபிரகாமின் வித்தினுடைய வரலாற்றுச் சூழலைப் பற்றிப் பார்ப்போம். முதலாவதாக ஆபிரகாமின் வித்தினுடைய எண்ணிக்கையின் அளவைக் குறித்துப் பரிசீலிப்போம்.

### எண்ணிக்கையின் அளவு

இப்பொழுது நாம் ஏற்கனவே பார்த்தபடி, “ஆபிரகாமின் வித்து” என்ற இந்த பதமானது ஒரு சமயத்தில் ஈசாக்கு என்ற ஒரு விஷேசித்த நபரைக் குறிப்பிட்டது என்பதை ஆதியாகமம் புத்தகம் தெளிவாகச் சொல்கிறது, மற்றும் புதிய ஏற்பாடானது இதைக்கொண்டு ஆபிரகாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயான தொடர்பை நிலைநாட்டுவதற்கு முயற்சிக்கிறது. ஆபிரகாமின் வித்தைக் குறித்ததான வேதாகமப் பார்வையின் மற்ற சிறப்பம்சங்களைப் பார்க்கும்படி நமது தரிசனத்தை விரிவாக்க வேண்டும். ஆபிரகாமைப் பற்றிய கதைகளில் ஆபிரகாமினுடைய வித்து அல்லது சந்ததி என அழைக்கப்படுபவர் ஈசாக்கு மட்டுமல்ல. ஆபிரகாமினுடைய சுதந்திராவளி என்ற உரிமையை ஈசாக்கு அவருக்காக மட்டுமே பெற்றுக்கொள்ளவில்லை. ஆபிரகாமினுடைய வம்சம் என்ற நிலையை அநேகர் அனுபவிப்பதற்கு அவரும் ஒரு வழியாக மட்டுமே இருந்தார். இதன் காரணமாக, மறுபடியும் மறுபடியுமாக மோசே இஸ்ரவேலர்களை ஆபிரகாமினுடைய வித்து என்று சொல்லி வந்தார். மேலும் அதிகமாக இதே போன்று, ஆபிரகாமினுடைய கதைகளை இந்த நவீன உலகத்திற்கு பொருத்தும்போது, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவானவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் வித்து என்பது மிக முக்கியமாக இருப்பதை நாம் நினைவில் கொள்ளும்போது, கிறிஸ்தவ சபைகளும் ஆபிரகாமினுடைய வித்து என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கலாத்தியர் 3:29 இல் பவுல் சொல்லியபடி,

> நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:29).

நாம் ஆபிரகாமுடன் தொடர்புடையவர்கள் ஏனென்றால் நாம் கிறிஸ்துவுடனே இணைக்கப்பட்டவர்கள் என்பதை இந்தப் பகுதியில், பவுல் தெளிவுபடுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களைப் போல நாமும் ஆபிரகாமினுடைய வித்துக்களே. இதன் காரணமாக, ஆபிரகாமினுடைய கதைகள் கிறிஸ்துவுக்கு மட்டுமல்ல, ஆனால் சபையாக அவருடன் அடையாளம் காணப்படுகிறவர்களான ஆபிரகாமினுடைய எண்ணற்ற பிள்ளைகளுக்கும் பொருந்தும்.

## இன அடையாளம்

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்களும், இன்றைய நாட்களின் கிறிஸ்தவ சபைகளும் ஆபிரகாமின் வித்து என்ற உண்மைக்கு அப்பாற்பட்டு, இரண்டு ஏற்பாடுகளிலும் ஆபிரகாமினுடைய வித்தின் இன அடையாளத்தின் மீது நாம் கருத்துச் சொல்ல வேண்டும். நாம் பார்த்தபடி, ஆபிரகாமினுடைய கதைகள் மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேல் தேசத்தாருக்கு முதலாவதாக எழுதப்பட்டது. மிகப்பெரிய அளவிலான மூல பார்வையாளர்கள் ஆபிரகாமினுடைய சரீரப்பிரகாரமான சந்ததியாகிய யூத இனத்தவர் என்பது முக்கியமான உண்மை எனும்போது, மூல பார்வையாளர்கள் கலப்படமற்ற அல்லது முற்றிலும் யூதர்கள் என்று தவறாகச் சிந்திக்க வைக்கின்றன. மோசேயைப் பின்பற்றின மிகப்பெரிய எண்ணிக்கையிலான ஜனங்கள், கானானுக்குச் செல்ல சுவீகாரம்செய்யப்பட்டவர்களான யூதர்கள் மற்றும் புறஜாதியார்களின் கலவையாகும். இதன் விளைவாக, அநேக சமயங்களில், ஆதியாகமத்தின் மூல பார்வையாளர்கள் யூதர்கள் மட்டுமல்ல என்பதை வேதவாக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

உதாரணமாக, யாத்திராகமம் 12:38 இல் மோசேயைப் பின்பற்றினவர்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க.

> அவர்களோடேகூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதுமன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று (யாத்திராகமம் 12:38).

இஸ்ரவேலர்களுடன் “பல ஜாதியான ஜனங்கள்” சேர்க்கப்பட்டுள்ளதை இங்கே கவனியுங்கள். இந்தக் கூட்டம் இஸ்ரவேலர்களுடன் சேர்ந்து எகிப்தை விட்டு வந்தவர்களாகிய புறஜாதியார்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்தக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குழு பற்றி வேதவாக்கியத்தில் அநேக சமயங்களில் சொல்லப்பட்டுள்ளது. அதிகமாக இதேபோல, எல்லாரும் நன்கு அறிந்த புறஜாதிகளான ராகாப், ரூத் போன்றவர்கள் பிற்கால சந்ததியாராகிய இஸ்ரவேலருடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதை பழைய ஏற்பாட்டின் பிற்பகுதி வெளிப்படுத்துகிறது, மற்றும் 1 நாளாகமம் 1–9 இல் சொல்லப்பட்டுள்ள வம்ச வரலாற்றில் தேவ ஜனங்களுடன் புறஜாதியாரின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆகவே, ஆபிரகாமின் கதைகளை மோசே முதலாவதாக யாருக்கு எழுதினாரோ அவர்கள் ஆபிரகாமின் வித்து என்னப்பட்டனர் அவர்கள் இன ரீதியாக கலந்திருந்தனர். இது ஆபிரகாமினுடைய சரீரப்பிரகாரமான சந்ததி மற்றும் இஸ்ரவேல் குடும்பத்திற்குள் சுவீகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புறஜாதியினரை உள்ளடக்கியது. இரண்டு குழுக்களும் ஆபிரகாமின் கதைகள் வாயிலாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் அவர்களின் வருங்காலம் என்ன என்பதைப் பற்றி கற்றிருந்தனர்.

அதிகமாக இதே போல, இன்றைய கிறிஸ்தவ சபைகளும் இனரீதியாக வேறுபட்டுள்ளன. கிறிஸ்துவை தங்களுடைய கர்த்தர் என்று உரிமை பாராட்டுகிற யூதர்களையும், ஆபிரகாமின் குடும்பத்திற்குள் சுவீகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புறஜாதியினரையும் இது உள்ளடக்கியுள்ளது, ஏனென்றால் புரஜாதியினரும் கிறிஸ்துவை அவர்களுடைய கர்த்தர் என்று உரிமைகோருகிறார்கள். இப்பொழுது, நிச்சயிக்கும் வண்ணமாக, நிறைவுபட்ட யூதர்களைக் காட்டிலும் சுவீகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புறஜாதியினரைக் கொண்டுதான் புதிய ஏற்பாட்டு சபையாக வளர்ந்துள்ளது என்பதை வரலாறு வெளிப்படுத்திக்காட்டுகிறது, ஆனால், பழைய ஏற்பாட்டில் இருந்தது போல ஆபிராகாமினுடைய வித்திற்குரிய இந்த இன வேறுபாடானது இன்றளவும் காணப்படுகிற உண்மை என்பது மெய்ப்படுகிறது. ஆகவே, ஆபிரகாமின் வித்தாக கருதப்பட்ட யூதர்கள் மற்றும் புறஜாதியினருக்கு முதலாவது ஆபிரகாமினுடைய கதைகள் கொடுக்கப்பட்டது போல, ஆபிரகாமினுடைய வித்தாகக் கருதப்படும் யூதர்கள் மற்றும் புறஜாதியாராகிய நாமும் ஆபிரகாமினுடைய கதைகளை செயல்படுத்திப்பார்க்கத் தயாராக இருக்க வேண்டும், ஏனென்றால், உலகம் முழுவதும் சபையில் அவர்கள் காணப்படுகிறார்கள்.

இது இன்றைய நவீன செயற்படுத்துதலின் மிக முக்கிய பண்புகள் ஆகும். ஏனென்றால், ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் எல்லாம் யூத இனத்தவர்கள் மட்டுமே செயற்படுத்திப்பார்க்க வேண்டியவர்கள் என்ற தவறான போதனைகளை அநேக கிறிஸ்தவர்கள் அங்கீகரிக்கிறார்கள். இந்தப் பார்வையின்படி, தேவன் புறஜாதி விசுவாசிகளுக்கு வேறு தனித் திட்டத்தை வைத்திருக்கிறார். அங்கொன்றும் இங்கொன்றுமான சில ஆவிக்குரிய கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு, புறஜாதி விசுவாசிகள் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு சுதந்திரவாளிகள் அல்ல. இவ்வளவு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரபலமான கண்ணோட்டமாக இது இருந்தாலும், நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டியது என்னவென்றால் மோசேயினுடைய நாட்களில் இருந்ததுபோல ஆபிரகாமினுடைய வித்து என்பது இன ரீதியாக வேறுபட்டிருந்தது மற்றும் ஆபிரகாமினுடைய வித்து என்பது இன ரீதியாக வேறுபட்ட ஜனங்களைக் கொண்டதாக இன்றளவும் தொடர்கிறது. மோசே அவனைப் பின்பற்றின தேசத்திற்கு கற்றுக்கொடுத்தவை அனைத்தும் தொடர்ச்சியாக இன்றைய தேசமாகிய இயேசு கிறிஸ்துவின் சபைக்கும் பொருந்தக்கூடியது.

## ஆவிக்குரிய குணாதிசயம்

மூன்றாவது இடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையினுடைய நவீன பயன்பாடு என்பது ஆபிரகாமின் வித்துகளாக இஸ்ரவேலர்கள் மற்றும் சபையின் ஆவிக்குரிய குணாதிசயங்களைக் கணக்கில் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். நாம் பார்த்தபடி பழைய ஏற்பாடு ஆபிரகாமின் வித்து என்று காணக்கூடிய இஸ்ரவேல் தேசத்தை, ஒன்றாக இணைக்கப்பட்ட ஆபிரகாமின் வித்து என்று அடையாளப்படுத்துகிறது, ஆனால் காணக்கூடிய இஸ்ரவேல் தேசத்திற்குள் ஆவிக்குரிய வேறுபாடுகள் காணப்பட்டதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே உண்மையான விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் காணப்பட்டனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என உண்மையாக விசுவாசிக்காத அநேகர் இஸ்ரவேல் தேசத்தில் காணப்பட்டனர் என்பதை பழைய ஏற்பாட்டு பதிவுகள் தெளிவுபடுத்துகின்றன, ஆனால் மற்ற அனைவரும் ஆபிரகாமினுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்த உண்மையான விசுவாசிகள். நிச்சயிக்கும் விதமாக, இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், விசுவாசிகள், அவிசுவாசிகள் இருவரும், பல தற்காலிக ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து பெற்றனர். அனைவரும் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டனர்; சீனாய் மலையில் அவர்கள் அனைவரும் தேவனுடனான உடன்படிக்கை உறவுமுறைக்குள் கொண்டுவரப்பட்டனர். விசுவாசத்திற்கான பல வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்தது மற்றும் அவர்கள் அனைவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அங்கே முக்கியமான வேறுபாடுகளும் காணப்பட்டன. ஒரு பக்கத்தில், இஸ்ரவேலர்களுக்குள் காணப்பட்ட அவிசுவாசிகள் துரோகம் செய்ததின் மூலம் அவர்களுடைய இருதயத்தின் உண்மையான குணாதிசயத்தைக் காண்பித்தனர். ஆபிரகாமினுடைய கதைகள் இவர்களை உண்மையான மனந்திரும்புதல் மற்றும் இரட்சிப்பிற்கேற்ற விசுவாசத்திற்கு நேராக அழைப்பு விடும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மறு பக்கத்தில், இஸ்ரவேலர்களுக்குள் காணப்பட்ட உண்மையான விசுவாசிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தனர் மற்றும் அவர்களுடைய உண்மையான பற்றின் வழியாக அவர்களுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருதயத்தின் உண்மையான குணாதிசயத்தை வெளிப்படுத்தினர். ஆபிரகாமின் கதைகள் இந்த உண்மையான விசுவாசிகளை தங்கள் விசுவாசத்தில் வளர ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய துரோகத்தின் விளைவாக இஸ்ரவேலர்களுக்குள் காணப்பட்ட அவிசுவாசிகள் தற்காலிக ஆசீர்வாதங்களை மட்டுமே பெற்றனர். ஆனால், நித்தியத்தில் அவர்கள் தேவனுடைய இறுதி, நித்திய நியாயத்தீர்ப்பை அடைவார்கள். ஆபிரகாமினுடைய உண்மையான வித்தாக, அவனுடைய ஆவிக்குரிய சந்ததியாகிய, உண்மையான விசுவாசிகள் தற்காலிக ஆசீர்வாதங்களை மட்டும் அனுபவிக்கவில்லை அவர்கள் ஒருநாள் புதிய வானம் மற்றும் புதிய பூமியில் ஆபிரகாமின் சுதந்திரவாளியாக நித்திய ஆசீர்வாதங்களையும் பெறுவார்கள். பவுல் இந்த கண்ணோட்டத்தை ரோமர் 9:6-8 இல் மிகத் தீவிரமாக விவாதித்திருக்கிறார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்க.

> இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே. 'ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்' என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள் (ரோமர் 9:6-8).

நல்லது, இதைப் போன்ற ஆவிக்குரிய வேறுபாடுகள் கிறிஸ்துவின் சபையில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வது கடினமானது அல்ல. ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டின் காணப்படுகிற சபையில் இணைக்கப்பட்டுள்ள ஜனங்கள் இரண்டு வகையினர்: விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள். உண்மையிலேயே, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் அனைவரும் பல தற்காலிக ஆசீர்வாதங்களை அனுபவித்தார்கள், ஏனென்றால், அவர்கள் தேவனோடும் அவருடைய ஜனங்களோடும் நட்பு வைத்திருந்தனர்; அதுபோல, கிறிஸ்துவின் சபையில் சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கும் பல தற்காலிக ஆசீர்வாதங்கள் உண்டு. அவர்கள் ஒரு அன்பான சமூகத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் தேவனுடைய வார்த்தையையும், சடங்குகளையும் கொண்டுள்ளனர்; ஈவாக கொடுக்கப்பட்ட மற்றும் விவரிக்கப்பட்ட சுவிஷேசம் அவர்களிடம் இருக்கிறது. ஆனால் காணப்படுகிற சபையில் பலர் தங்களுடைய துரோகத்தின் மூலமாக அவர்களுடைய இருதயத்தின் உண்மையான குணாதிசயங்களை வெளிப்படுத்துகின்றனர். மற்றும் உண்மையான மனந்திரும்புதல் மற்றும் இரட்சிப்பின் விசுவாசத்தை அடையும்படியாக அழைக்கப்படுவதின் மூலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் கதைகள் சபையில் காணப்படும் அவிசுவாசிகள் மீது செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் காணப்படுகிற சபைக்குள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிற உண்மையான விசுவாசிகளும் உள்ளனர் மற்றும் தங்களுடைய தேவப்பற்றின் மூலமாக அவர்களுடைய இருதயத்தின் குணாதிசயங்களை மெய்ப்பிக்கின்றனர். இந்த உண்மையான விசுவாசிகளிடத்தில் ஆபிரகாமின் கதைகள் அவர்கள் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் விசுவாசத்தில் வளரும்படியாக உற்சாகப்படுத்தும் விதமாக செயல்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது, அவர்களின் துரோகத்தின் காரணமாக, சபைக்குள் காணப்படுகிற அவிசுவாசிகள் தற்காலிக ஆசீர்வாதங்களை மட்டுமே பெற்றுக்கொள்வார்கள். நித்தியத்தில், அவர்கள் தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பை பெறுவார்கள். ஆனால், ஆபிரகாமின் உண்மையான வித்து, ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகள், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கும் அனைவரும் அநேக தற்காலிக ஆசீர்வாதங்களை மட்டும் பெற்றுக்கொள்வதில்லை, ஆனால் புதிய வானம் புதிய பூமியில் ஆபிரகாமின் சுதந்திரவாளிகளாக, அவர்களுடைய நித்தியப் பரிசுகளைப் பெறுவார்கள்.

இதன் காரணமாகவே, யாக்கோபு ஆபிரகாமைப் பற்றி யாக்கோபு 2:21-22 இல் எழுதினார். விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளைக் கொண்டுள்ள காணக்கூடிய கிறிஸ்தவ சபைக்கு எழுதும்போது, அவர் இந்த வார்த்தைகளை சொல்கிறார்,

> நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே (யாக்கோபு 2:21-22).

யாக்கோபினுடைய முதன்மையான எண்ணம் இங்கு என்னவென்றால் ஆபிரகாமின் கதைகள் சபையில் காணப்படும் அவிசுவாசிகளை அவர்களுடைய மாய்மாலத்திலிருந்து திரும்பும்படியாகவும், சபையில் காணப்படும் விசுவாசிகளை விசுவாசமுள்ள வாழ்க்கை வாழ்வதின் மூலமாக அவர்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்படியாகவும் சவால்விடுகிறது. மேலும் ஆபிரகாமினுடைய கதைகளை நவீன பயன்பாட்டிற்கு உட்படுத்தும்போது, இன்றைய சபைகளில் காணப்படுகின்ற ஆவிக்குரிய வேறுபாடுகளை அடையாளம் கண்டு யாக்கோபின் மாதிரிகளை நாம் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## வரலாற்றுச் சூழல்

நான்காவது இடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையை நவீன உலகத்தில் செயல்படுத்தும்போது, மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்களுக்கும், இன்றைய கிறிஸ்தவ சபைகளுக்கும் இடையே காணப்படுகிற வரலாற்று சூழலில் இருக்கும் குறிப்பிடத்தக்க ஒற்றுமையை நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். பிரயாணத்தில் இருந்த இஸ்ரவேலர்களுக்கு ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றி மோசே எழுதியுள்ளதை நினைவுகூற வேண்டும். மோசே யாத்திராகமத்தின் முதல் அல்லது இரண்டாம் தலைமுறைக்கு எழுதியிருந்தாலும், அவருடைய மூலப் பார்வையாளர்கள் இரண்டு உலகத்திற்கு இடையே பிரயாணப்பட்டார்கள். ஒரு பக்கத்தில், எகிப்தின் அடிமைத்தனத்தை விட்டு வந்தார்கள். ஆனால், மறுபக்கத்தில்,அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. வேறு விதமாக சொல்லவேண்டுமென்றால், இஸ்ரவேல் தேசம் ஆரம்ப நிலை மீட்பை அவர்களுடைய பழைய உலகத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள், ஆனால், அவர்கள் புதிய உலகத்திற்குள் பிரவேசிக்கவில்லை. மற்றும் முடிவாக, அவர்கள் எகிப்துடன் கொண்டிருந்த அனைத்து இணைப்புகளையும் கைவிட்டுவிட்டு, தேசத்தை அடையும்படியாக முன்னோக்கிச் செல்லும்படியாக இஸ்ரவேலர்களை உற்சாகப்படுத்தும் விதமாக மோசே இதை எழுகிறார்.

மூல பார்வையாளர்களின் வரலாற்றுச் சூழல் என்பது நவீன பயன்பாட்டுக்கு மிக முக்கியமானது ஏனெனில் இன்றைய கிறிஸ்தவ சபைகளும் வரலாற்றுச் சூழலுக்கு இணையாக உள்ளது. இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு மகிமையான வாழ்க்கைக்கு நேராக கானான் தேசத்தை நோக்கி முன்சென்றார்கள், அதுபோல கிறிஸ்துவின் சபையும், கிறிஸ்து இந்த பூமியிலிருந்த போது, அவர் செய்த கிரியையின் மூலமாக, பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளனர், ஆனால் கிறிஸ்துவின் வருகையில் தோன்றும் புதிய சிருஷ்டியின் மகிமைக்கு நேராய் முன்னோக்கித் தொடருகிறோம். இந்த இணையான சூழல்கள் இன்றைய சபையின் மீது ஆபிரகாமின் வாழ்க்கையின் பயன்பாட்டை உருவாக்குவதற்கானதொரு குறிப்பிட்ட அமைப்பை நமக்கு வழங்குகின்றன. இஸ்ரவேல் தேசம் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் அவர்களுடைய பிரயாணத்தில் இஸ்ரவேலை வழிநடத்தவும், உற்சாகப்படுத்தவும் ஆபிரகாமைப் பற்றி மோசே எழுதினதுபோல, அவருடைய கதைகள் சாவுக்கேதுவான உலகத்திலிருந்து நித்திய வாழ்வை உடைய புதிய உலகத்திற்கு நேரான நம்முடைய பிரயாணத்தில் நம்மை வழிநடத்தடவும், உற்சாகப்படுத்தவும் செய்கிறது.

இந்தவிதமான வரலாற்று ஒப்பனை பயன்பாட்டின் மீது எவ்வகையான அணுகுமுறைகள் மற்றும் நம்பிக்கைகளின் ஒருங்கிணைந்த தொகுப்பை வழங்குகின்றன என்பதை நாம் நிச்சயித்துக்கொள்ளலாம், ஏனென்றால், பவுல் கொரிந்து சபையின் மீது பழைய ஏற்பாட்டைப் பிரயோகிக்கும்போது அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவற்றின் மீது கவனம் செலுத்தும்படிச் செய்தார். மோசேயின் பார்வையாளர்களுக்கும் சபைக்கும் இடையேயுள்ள இந்த வரலாற்று ஒப்பனைகளை 1 கொரிந்தியர் 10:1-6 இல் பவுல் எப்படி குறிப்பிட்டுள்ளார் என்ற முறையினைக் கவனிக்க.

> இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது (1 கொரிந்தியர் 10:1-6).

சாதாரணமாக, வனாந்தரத்தில் மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்கள் அடைந்த அனுபவங்கள், கிறிஸ்தவர்களின் அனுபவங்களுக்கு இணையாகக் காணப்படுகின்றன என்பதை பவுல் குறிப்பிடுகிறார். நாம் கிறிஸ்துவினால் மீட்கப்பட்டது போல அவர்கள் மோசேயினால் மீட்கப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் ஞானஸ்நானம் பெற்றது போல அவர்கள் மோசேயில் ஞானஸ்நானம் பெற்றார்கள். கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் புசித்து பானம்பண்ணுவதுபோல அவர்கள் தேவனிடத்திலிருந்து மன்னாவைப் புசித்து தண்ணீர் அருந்தினார்கள். இருப்பினும், இந்த கிருபையின் முன் அனுபவங்கள் இஸ்ரவேலர்களை அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அவர்கள் சென்றுகொண்டிருக்கும்போதே, அவர்களுடைய தகுதியை அறியும் ஒரு காலத்திற்குள், ஒரு சோதனை காலத்திற்குள் செல்வதற்கு தயார்படுத்தியது. துரதிர்ஷ்டவசமாக, மோசேயின் நாட்களில் பெரும்பாலான இஸ்ரவேலர்கள் தேவனுக்குப் பிரியமில்லாமற்போனார்கள் மற்றும் அவர்கள் வனாந்தரத்திலேயே மரித்துப்போனார்கள். அதனால், சபையாக கிறிஸ்தவர்கள் இஸ்ரவேலர்களின் அனுபவங்களிலிருந்து அவர்களுடைய பிரயாணத்தின் இயல்புநிலையிலிருந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கற்றுக்கொள்ளவேண்டுமென்று பவுல் முடிவு செய்கிறார். பவுலினுடைய மாதிரியிலிருந்து, ஆபிரகாமின் வாழ்க்கையை கிறிஸ்தவ சபைக்கு எப்படி பயன்படுத்த வேண்டும் என்று அதிகமாக நாம் கற்றுக் கொள்ளலாம்.

ஆபிரகாமின் வாழ்க்கையைக் குறித்ததான மோசேயின் கதைகள் இஸ்ரவேலர்களை எப்படி விசுவாசமுள்ளவர்களாக நிலைத்திருப்பது என்று உற்சாகப்படுத்தினது, அவர்கள் திரும்பிப் பார்த்து தேவன் எகிப்திலிருந்து அவர்களை மீட்பதற்காக செய்ததை நினைத்துப்பார்த்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். அதிகமாக அதே போல, ஆபிரகாமினுடைய கதைகளை இன்றைய சபையில் பயன்படுத்தும்போது நம்முடைய பிரயாணத்திலும் அது நம்மை உற்சாகப்படுத்தும். ராஜ்யத்தின் துவக்கத்தில் அவர் செய்தவைகளுக்காக நாம் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய நாளில் அவருடைய ராஜ்யம் வளர்கிறதினாலே நாம் அவரிடத்தில் தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டும், மற்றும் நாம் புதிய வானம் புதிய பூமியில் பிரவேசிக்கும்போது, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் பிரயாணம் முடிவதற்கு நாம் வாஞ்சிக்க வேண்டும்.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் நவீன பயன்பாட்டிற்கு நாம் கடக்கும்போது, ஆபிரகாம் மற்றும் இயேசுவிற்கு இடையேயான தொடர்புகள் குறித்து மட்டும் பரிசீலிக்கக்கூடாது என்பதை நாம் பார்த்தோம். ஆபிரகாமின் இந்தக் கதைகளை முதலாவது பெற்றுக்கொண்ட இஸ்ரவேல் தேசம் மற்றும் கிறிஸ்தவ சபைக்கு இடையேயான தொடர்பின் மீதும் நாம் கவனம் செலுத்த வேண்டும். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் தேசம் மற்றும் புதிய ஏற்பாட்டு சபை இரண்டும் ஆபிரகாமின் வித்துக்களே; நாம் இருவருமே கலக்கப்பட்ட இன அடையாளங்களே; நாம் இருவரும் ஆவிக்குரிய வேறுபாடு உடையவர்கள் மற்றும் நாம் இருவரும் தேவனுடைய மகிமையான ராஜ்யத்தை நோக்கியதான இலக்கை நோக்கி பிரயாணம் செய்பவர்கள்.

## முக்கிய கருப்பொருள்கள்

இன்றைய உலகில் ஆபிரகாமின் தொடர்ச்சியான வித்தாக கிறிஸ்தவ சபையில் ஆபிரகாமின் வாழ்க்கையை பயன்படுத்துவதைப் பார்க்கும்போதே, ஆபிராகாமின் வாழ்க்கைக்குக் கொடுக்கப்பட்ட நான்கு முக்கியக் கருப்பொருள்களை எவ்வாறு இந்த பயன்பாட்டின் செயல்முறை தொடர்பு கொள்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். கிறிஸ்துவுடனான நம்முடைய அன்றாட வாழ்க்கையைக் குறித்து இந்த மையக்கருத்துகள் என்ன கூறவிருக்கின்றன?

ஆபிரகாமினுடைய கதைகளின் நான்கு பிரதான வாதங்களை நாம் நினைவு கூறலாம்: தெய்வீக கிருபை, ஆபிரகாமின் தேவப்பற்று, ஆபிரகாமிற்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் ஆபிரகாமின் மூலம் தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்கள். பின்வரும் பாடங்களில், ஆபிரகாமின் வித்துகளாக நமது வாழ்க்கையில் எவ்வாறு இந்த கருப்பொருள்கள் பேசுகின்றன என்பதை மீண்டும் மீண்டுமாக நாம் சுட்டிக்காட்டுவோம். இந்த கட்டத்தில், நாம் பின்பற்ற வேண்டிய சில பொதுவான வழிமுறைகளை சுருக்கமாக வழங்குவோம். முதலாவதாக, தெய்வீக கிருபையைப் பற்றி பரிசீலிப்போம்.

## தெய்வீக கிருபை

ஆபிரகாமினுடைய ஆரம்ப நாட்களில் மட்டுமல்ல அவன் பூமியில் நீடித்திருந்த நாட்கள் முழுவதும் தேவன் அவனுக்கு அதிக இரக்கத்தைக் காண்பித்தார். மேலும் தேவன் ஆபிரகாமிற்கு இரக்கம் காட்டியது போல, கிறிஸ்துவுக்குள் துவக்கப்படவும் நிலைத்திருக்கவும் செய்வதன் மூலம் தேவன் இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் தம் இரக்கத்தை காண்பிக்கிறார் என்று வேத வாக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன . எபேசியர் 2:8-9 இல் பவுல் சொல்வது போல:

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு – இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8-9).

கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையின் ஈவு; நாம் கொண்டிருக்கும் விசுவாசம்கூட அவரிடமிருந்து வருவதுதான். நாம் தேவனுடைய இரக்கத்தை அதிகமாகச் சார்ந்திருக்கிறோம் அதாவது நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் அந்த இரக்கத்தில் தொடர்ந்து வாழ வேண்டியுள்ளது. தேவனுடைய நீடித்த கிருபையில்லாமல், விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருப்பதற்கு நம்முடைய முயற்சிகள் வீணாயிருக்கிறது.

இதன் காரணமாக, மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்கள் ஆபிரகாமினுடைய கதைகளைக் கேட்டு, அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய கிருபையின் ஆச்சரியங்களைக் குறித்து நிச்சயமாக கற்றிருப்பார்கள், அதுபோல, ஒவ்வொரு முறையும் ஆபிரகாமிற்கு தேவன் காண்பித்த இரக்கத்தைக் குறித்து நாம் வாசிக்கும்போது, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக, இணைந்தோ அல்லது தனித்தோ, தேவன் நமக்கு செய்தவைகளுக்காக எப்படி நன்றியுள்ளவர்களாய் இருப்பது என்று கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றன. தேவன் அதிகமான இரக்கத்தை நமக்குக் காண்பித்திருக்கிறார், அவருடைய இரக்கத்தைத் தேடி அதைச் சார்ந்துகொள்வதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## ஆபிரகாமுடைய தேவப்பற்று

அதிகமாக இதேபோன்று, ஆபிரகாமின் தேவப்பற்றைக் குறித்ததான கருப்பொருளும் அநேக நிலைகளில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்குப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பொருந்துகிறது. ஆபிரகாமின் வாழ்க்கையைக் குறித்து நாம் வாசிக்கும்போது, அநேக சூழ்நிலைகளில் தேவனைக் கீழ்ப்படிதலோடு சேவிக்க ஆபிரகாம் கட்டளையிடப்படுகிறார். ஆபிரகாம் இந்த வாழ்க்கையின் பூரணநிலையை அடையவில்லை என்பது உண்மைதான், ஆனால் அவர் உண்மையான விசுவாசத்தின் கனியைக் காண்பித்தார். இப்பொழுது, பழைய ஏற்பாட்டிலும், விசுவாசமுள்ள கீழ்ப்படிதல் என்பது எப்பொழுதும் தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபையின் அடிப்படையிலேயே காணப்பட்டது என்பதை நினைவில்கொள்ள வேண்டியது மிக முக்கியமானது. அதனால், இந்த முக்கியத்துவத்தை சட்டவாதத்தின் வடிவம் எனத் தவறாக எண்ணிவிடக்கூடாது. எனினும் பழைய ஏற்பாட்டில் உள்ளதுபோல இன்றைய உண்மையான விசுவாசிகளும் விசுவாசமுள்ளவர்களாய் தேவனைச் சேவிப்பதின் மூலம் தேவனுடைய கிருபைக்கு உத்தரவு அளிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

இதன் காரணமாகவே, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கான தேவப்பற்றின் பொறுப்புகளைக் குறித்து புதிய ஏற்பாடு அடிக்கடி வலியுறுத்துகிறது. எபேசியர் 2:8-10 இல் பவுல் கிருபையையும் தேவப்பற்றையும் தொடர்புபடுத்தும் விதத்தைக் கவனிக்க.

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு – இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபேசியர் 2:8-10).

வசனம் 10 தெளிவாகச் சொல்வதுபோல, இன்றைய கிறிஸ்தவர்களிடம் நற்கிரியைகள் செய்வதற்கான பொறுப்பு உள்ளது. நாம் விசுவாசமுள்ளவர்களாக நிலைத்திருக்கும்படியாக தேவன் நமக்கு இரட்சிப்பின் விசுவாசத்தை வழங்கியிருக்கிறார். ஆகவே, மனிதனுடைய தேவப்பற்றைக் குறித்து ஒவ்வொரு முறையும் ஆபிராகாமின் வாழ்க்கை வாதங்களை எழுப்பும்போதும், அந்த நன்மை செய்யும் பொறுப்புகளை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கான நிலையில் நாம் உள்ளோம்.

## ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்

மூன்றாவது இடத்தில், ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட ஆசீர்வாதங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு பொருந்தும் வழிகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். தேவன் ஆபிரகாமிற்கும் அவனுடைய வித்துக்கும் சிறந்த ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதை நினைவுகூறவேண்டும். இறுதியாக, அவர்கள் மாபெரும் கீர்த்தி வாய்ந்த ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சிறந்த, செழிப்பான தேசமாகிவிடுவார்கள். மேலும் ஆபிரகாமினுடைய கதைகள் முழுவதுமாக தேவன் முற்பிதாவை இந்த இறுதியான ஆசீர்வாதங்களை முன்கூட்டியே ருசிபார்க்கும்படியாக ஆசீர்வதித்ததை நாம் காணலாம்.

மூல பார்வையாளர்களான இஸ்ரவேலர்கள் அவர்களுடைய இறுதியான ஆசீர்வாதங்களுக்காக காத்திருந்து, ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் நிறைவேறுவதைக் கண்டதுபோல, இன்று கிறிஸ்தவர்களாக நாமும் அவர்கள் எல்லாவிதமான நிறைவேறுதலுடன் நம்மிடம் வருவதற்காக நம்பிக்கையுடன் காத்திருந்து, இவ்விதமான அநேக ஆசீர்வாதங்களை இங்கே ருசிபார்க்கும்படியான அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் வருகையின் போது நமக்குரியதாகப் போகின்ற இறுதியான ஆசீர்வாதங்களுக்காக நம்பிக்கையுடன் நமது அனுதின வாழ்க்கையை வாழும்போது இந்த வாழ்க்கையில் நாம் காண்கிற ஆசீர்வாதங்கள் நமக்கு அதிகமான உற்சாகத்தைத் தருகிறது.

## ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள்

முடிவாக, ஆபிரகாமினுடைய கதைகள், தேவன் ஆபிரகாம் மூலமாக உலகத்திற்குத் தரப்போகிற ஆசீர்வாதங்கள் மீது கவனம் செலுத்தும்போது, கிறிஸ்தவர்களும் நம் மூலமாக இந்த உலகம் அடையப்போகும் ஆசீர்வாதங்களைப் பிரதிபலிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆபிரகாம் சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பையும் அவனுடைய சிநேகிதர்களுக்கு ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தமாய் பெற்றுக்கொண்டார், ஏனெனில், அவன் மூலமாக ஒருநாள் பூமியிலுள்ள தேசங்கள் அனைத்திற்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பகிரப்படும் என்பதை நாம் நினைவுகூறுவோம். மற்றும் இதைக் காட்டிலும் மேலாக, ஆபிரகாமின் கதைகள் வாயிலாக, அவ்வப்போது, அனைத்து விதமான ஜனங்களுக்கும் அவருடைய ஆசீர்வாதத்தின் கருவியாக தேவன் ஆபிரகாமைப் பயன்படுத்தினார் என்பதை நாம் காணலாம்.

ஆதியாகமத்தின் மூல பார்வையாளர்கள் இந்த நிகழ்வுகளைக் கற்றதிலிருந்து, அவர்கள் இந்த நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதற்கான அநேக வாய்ப்புகளைக் கொண்டிருந்தார்கள். இந்த உலகத்திற்கு தேவனுடைய ஆசீர்வாதத்தின் கருவியாக சேவை செய்வதற்குரிய வழிகாட்டலை அவர்கள் கண்டுகொண்டார்கள். சத்துருக்களிடமிருந்து தேவனுடைய பாதுகாப்பு மற்றும் அவர்களுடைய அயலார்க்கு தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பரப்புவதற்கான முயற்சிகளுடன் முன்னேறிச் செல்வதையும் குறித்து அவர்கள் நிச்சயித்திருந்தார்கள்.

அதிகமாக அதைப்போன்று, கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த மையக்கருத்துகளை நம்முடைய வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாமும்கூட தேவனுடைய பாதுகாப்பின் நிச்சயத்தை உடையவர்களாகவும் , தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் எல்லைவரைக்கும் விரிவுபடுத்துவதின் மூலமாக தேசங்கள் அனைத்திற்கும் ஆசீர்வாதமாக இருப்போம் என்ற உற்சாகத்தை கண்டுகொள்பவர்களாகவும் காணப்படுவோம்.

## முடிவுரை

ஆபிரகாமின் வாழ்க்கையின் நவீன பயன்பாடின் மீதான இந்த பாடத்தில், முற்பிதாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டதாய் காணப்படுகிற ஆதியாகமத்தின் அதிகாரங்கள் எவ்வாறு நம்முடைய உலகத்திற்கு இன்று பொருத்தமானவை என்பதை நாம் ஆராய்ந்தோம். முதலாவதாக, வேதாகமத்தின் இந்தப் பகுதியின் மீது கிறிஸ்தவ அணுகுமுறை என்பது ஆபிரகாமின் மிகச் சிறந்த வித்தாக கிறிஸ்துவின் மீது கவனத்தை ஈர்க்கிறது என்பதை நாம் கவனித்தோம். ஆபிரகாமினுடைய வாழ்க்கையில் நாம் கண்டுபிடித்ததான மையக்கருத்துகளை கிறிஸ்து நிறைவேற்றுகிறதான வழிகளை இது தேடுகிறது. ஆனால், இதற்கு அப்பாற்பட்டு, ஆபிரகாமின் வாழ்க்கை எப்படி ஒன்றிணைந்த ஆபிராகாமின் வித்தாக, சபைக்குப் பொருந்துகிறது என்று நாம் பார்த்தோம். வேதவாக்கியங்களின் இந்தப் பகுதியின் போதனைகள்படி கிறிஸ்துவில் ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் எவ்வாறு வாழ வேண்டியவர்கள்.

ஆதியாகமத்தில் ஆபிரகாமின் வாழ்க்கையை மிக நெருக்கமாக நாம் பார்த்ததின்படி, நமது இன்றைய வாழ்க்கையில் முற்பிதாவின் வாழ்வை அப்பியாசப்படுத்துவதற்கான அநேக வாய்ப்புகள் நமக்கு இருக்கிறது. பிதாவாகிய ஆபிரகாமைப் பற்றிய மோசேயின் கணக்கு, நமது இருதயத்தை முற்பிதாவை நோக்கி மட்டுமல்ல, ஆபிரகாமின் வித்தாகிய கிறிஸ்துவை நோக்கியும், கிறிஸ்துவுக்குள் ஆபிரகாமின் பிள்ளைகளாக மற்றும் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் சுதந்திரவாளிகளாக ஆச்சரியமாகக் காணப்படுகிற நம்மை நோக்கியும் ஈர்க்கிறது என்பதை நாம் கண்டுகொள்ளலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.